தகவல் சட்டம் 2005
அறியும் உரிமை

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 10.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-11054/A/2019**

Thiru R. Rajasekaran -- மேல்முறையீட்டாளர்
S/o. K. Rajendran
3-21A, Karungudi,
Moolaavanjeri Panchayat
Inam Kiliyur Post, Velangaiman Taluk
Thiruvarur District - 614 208.

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் -- பொது அதிகார அமைப்பு
(தலைமையிடம்)
மாவட்ட காவல் அலுவலகம்
திருவாரூர் மாவட்டம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 09.08.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், அனைத்து மகளிர் காவல் நிலையம், நன்னிலம், திருவாரூர் மாவட்டம், என்று முகவரியிட்டு அனுப்பிய மனுவில் copy of complaint given by my wife Tmt. Sengani against self (Rajasekaran R) along with its enclosures, if any and also copy of written statement given by me and by my wife on 04th July 2019 ஆகிய தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. தகவல்கள் பெறப்படாததால், மனுதாரர் பிரிவு 19(1)-ன்கீழ் 03.10.2019-ல் தமது முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதுகுறித்து, மேல்

முறையீட்டு அலுவலர் 01/11/2019 தேதியிட்டு மனுதாரருக்கு பதில் அனுப்பியுள்ளார். அதன்பின்னர், மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 14.11.2019-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

3. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 17.10..2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது.

4. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர், 27/10/2020 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் எழுப்பிய கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து கடிதத்தை ஆணையத்திற்கு சமர்பித்துள்ளார். மனுதாரரும் தமது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களில் தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்துள்ளார். **ஆகவே வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**

**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண். SA-11054/A/2019**

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்)
மாவட்ட காவல் அலுவலகம்
திருவாரூர் மாவட்டம்.

மனுதாரர்

Thiru R. Rajasekaran
S/o. K. Rajendran
3-21A, Karungudi,
Moolaavanjeri Panchayat
Inam Kiliyur Post, Velangaiman Taluk
Thiruvarur District - 614 208.

RS/Sr.PS 10/11/2020